உ

ஓம் தத் சத்.

ஏகமேவாத்விதீயம்ப்ரம்மம்

அனுபவவாக்கியமென்னும்

பிரபலசுருதித்திரட்டு.

அயன்புரம் ஆருதார விலாச முதலிய
நூலாசிரியர் வித்வான் கன்னிபுத்தூர்
வேலாயுத முதலியார் குமாரரும்,
மார்க்கண்டேயவர்க்கம்
ஸ்ரீமத் சிவானந்த சுவாமிகள் மாணவருமாகிய
தணிகை நிர்மலானந்தம்

க. வேதாசல சுவாமிகளால்

திரட்டி, சென்னை பெரவள்ளூரில்
ஷை சிவானந்த சுவாமிகள்
2-வது வருட குரு பூஜா தினமாகிய
சுக்கில-ஷு புரட்டாசி-மீ 6-ந் தேதி
சனிவாரம் அசுவனிநட்சத்திரம் (21-9-29-ல்)
சென்னை சமரச நிலைய சன்மார்க்க
சபையாரால் பிரசுரம் செய்யப்பட்டது.

ஓம் சாந்தி.

...ம், பெங்களூர். 14—9—29.

ஓம் தத் சத்.

குருபரப்பிரம்மணே நம:

தருமாபு துதி விருத்தம்.

ஓதுமார்க் கண்ட வர்க்கத்
　　தொளிர்சிவ பரங்கி ரிப்பேர்
சோதியை மற்ற வன்றன்
　　துணையடி வழுத்துந் தூய
வாதிகா மாக்ஷி சுந்த்ர
　　வறிவனை மற்ற வன்றன்
றீதிலா வருட்பெற் றோருங்குஞ்
　　சிவானந்தர்க் கன்பு செய்வாம்.

*அந்தகோ லாங்கூல நியாயத்தை
　　யறிவித்தவ் வசடர் பின்னே
முந்திடா தருண்ஞான் சாதனசம்
　　பத்திந்து முழுது மாண்ட
சந்தமார் மார்க்கண்ட தருவில்வரு
　　சிவானந்தன் தனிப்பொற் றாளைச்
சிந்தையாங் கோயிலிடை யினிதிருத்தித்
　　துவிதமறச் சேவிப் பேனே.

சீவன்முத்தர்கள் துதி.

உத்தம சிவன் முத்தர்கள் பூம்பா
தத்தெழு தூசுத் தான்றிரு [illegible]
சுத்த மனத்தாற் சொல்லித் [illegible]

* அந்தகோலாங்கூல நியாயம் :—ஒரு பணக்காரனுடைய ஆபரணம் பூண்ட புத்திரனைத் திருடர்கள் காட்டுக்குக் கொண்டுபோய் ஆபரணங்களைப் பிடுங்கிக்கொண்டு அவன் கண்ணையுங் கெடுத்துவிட்டுப் போய்விட்டார்கள். அப்போது அழுதுக்கொண்டிருந்த பையனைத் தயையற்ற வஞ்சனையுள்ள ஒருவன் சந்தித்து ஒரு கொழுத்த காளையின் வாலை அவன் கையிற் கொடுத்து இதை விடாமற் பிடித்துக்கொண்டுபோனால் ஊர்போய்ச்சேரலாமென்றான். அத்துயருற்ற பையன் அவன் வார்த்தையை நம்பிப் பெருந் துக்கமடைந்து நஷ்டமானான். அதுபோல் விஷயரூப சோரன் ஒருவன் **விவேகரூப** நேத்திரத்தைக் கெடுத்துச் **சமுசாரரூப** வனத்தில் கொண்டுபோய் விடுகிறான். அப்போது தயையற்றவனும் வஞ்சனையுற்றவனுமிருக்கிற பேதவாதி அந்நிய சாஸ்திரங்களின் சித்தாந்தத்தில் அவனுக்கு விசுவாசம் வரும்படி செய்து என்னுடைய உபதேசமே உனக்குப் பரம சுகத்துக்குக் காரணமாகும் அதை விடாதேயென்று சொல்லுகிறான். அவன் வார்த்தையை நம்பிப் புருஷார்த்த சுகத்தை யிழந்தவனாய் ஜனன மரண ரூப மகத்தான துக்கத்தையநுபவிக்கிறான். ஆகையால் அந்நிய சாஸ்திரங்கள் தள்ளத்தக்கன. [**விசார சாகரம்.**]

திருச்சிற்றம்பலம்.

உ

ஓம் தத் சத்.

குருபாதம் முன்னிற்க.

சமாதி சகஜம்.

கணபதி துதி.

அத்திமுகவனை மத்தன்மதலையை
நித்தநினைபவர் முத்திபெறுவரே.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொன்னிலே பூணும் புவியினிற் கடமும்
புணரியிற் றரங்கமும் போல
வென்னிலே தோன்றி யழியுமைம் பூத
மெச்சரா சரங்களு மெனக்கு
முன்னிலா பின்னு மொன்றிலா பின்னு
முடிவிலா வொலியவான் மோனந்
தன்னிலே தானே தனையுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 1.

எற்பட விளங்கும் விவேகவன் னியினு
லிதயவைம் பூதத்தை யெரித்தே
நிற்பன நடப்ப யாவையு மழித்து
நேர்பட நிராமய மாக்கி

மற்பெரும் பூத மாயையை மாய்த்து
மாயையான் மாவிலே படித்துத்
தற்பரம் பொருளாய்த் தனையுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 2.

சித்துவி னுருநா னென்றகண் டிதமாய்ச்
செகத்தறி யாமையற் றறிவாய்
மத்துவ மான மிறந்தபே ரொளியாய்
மறப்பொடு நினைப்பவை மாற்றிப்
பத்துவன் விடுவா னத்துவா வென்னும்
பல்லுயிர்ப் பிரிவறக் காணும்
தத்துவ முடிவாய்த் தனையுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 3.

சுட்டுத லறவே துரியமுங் கடந்து
சூனியா சூனியந் தன்னி
லெட்டுத லறவே யேகமா யொன்று
மெங்கணு மகண்டபே ரறிவாய்க்
கட்டுத லறவே கடவடி வமும்போய்க்
ககநமொத் தசஞ்சல னுயத்
தட்டுத லறவே தனையுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 4.

ஆக்குத லின்றி யழித்திட லின்றி
யநித்திய நித்திய மின்றி
நோக்குத லின்றி நோயற வின்றி
நொந்தெழும் பந்தமற் றின்றிப்
போக்குத லின்றி வரவிதென் றின்றிப்
பொய்ப்பொருட் போதமற் றின்றித்
தாக்குத லின்றித் தனையுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 5.

ஊனவ னாக வுயிரவ னாக
வுளதில துருவரு வாக
வானவ னாக வளியவ னாக
வந்நிநீர் மண்முத லாக
நானவ னாக நன்மைதீ தாக
நடுவடி முடிதிசை யெல்லாந்
தானவ னாக தனையுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 6.

மங்குமைம் பூதப் படலமுங் கீறி
மாசெனு மிருளறத் துரந்து
பொங்குபே ரொளியாய் நிறைந்தொளி பரப்பிப்
போதபூ ரணநிரா மயமா

யெங்குமோ ருருவா யெண்டிசை யண்ட
   மெண்ணில்பல் கோடிக ளனைத்துந்
தங்குமா தரவாய்த் தனையுணர் வதும்போய்த்
   தானிறந் திருப்பதே சமாதி. 7.

ஆணுநான் பெண்ணு னலியுநா னென்ன
   வான்மதற் சொரூபமாய் விளங்குஞ்
சேணுநான் மற்றென் றற்றசித் தேநான்
   செகத்துடன் சிவதற் பரமாய்க்
காணுநா னென்னக் கண்டுகொண் டிருக்குங்
   கண்ணுநான் கண்ணிடை யொளிநான்
ருணுநா னென்னத் தனையுணர் வதும்போய்த்
   தானிறந் திருப்பதே சமாதி. 8.

துக்கமற் றறிவிற் கண்டதெல் லாம்போய்த்
   துறநதறத் துன்னிய வடிவாய்
அக்கமற் றறிவற் றழிவிலாப் பரமா
   யறிந்தவ னதிலிறந் தவனைப்
பக்கமற் றறிவாய்ப் பரமமா யொன்ருய்ப்
   பதம்பிறி தின்றிநின் றென்றுந்
தக்கமற் றறிவாய்த் தனையுணர் வதும்போய்த்
   தானிறந் திருப்பதே சமாதி. 9.

என்மய லுனே யெதிரிலாப் பெருங்கண்
ணெனைப்பிறி வறிற்பொரு ளில்லைப்
பின்மயந் தானே யென்னிடத் துலகம்
பிறந்திறந் தென்னிலே யொடுங்குஞ்
சின்மய வடிவாய்ச் சிவமுத லீறுய்ச்
சிந்தனைக் குள்ளிடா ததுவே
தன்மயந் தானுய்த் தனைபுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 10.

கண்ணிலாக் காட்சி காண்பதொன் றில்லைக்
காதலாற் கேட்பதொன் றில்லை
விண்ணிலா விடமற் றில்லையா தலினல்
விண்ணினு நொய்யவான் வடிவாய்ப்
பண்ணிலாப் பொருளாய்ப் பழமறை முடிவாய்ப்
பகலிர வொன்றுமில் லாமற்
றண்ணிலா நிறைவாய்த் தனைபுணர் வதும்போய்த்
தானிறந் திருப்பதே சமாதி. 11.

சமாதி சகஜம், சம்பூர்ணம்.

ஓம் சாந்தி.

அறுசுவைவிருப்பமருந்தவம் நீங்குமெனல்.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா.

விருத்தம்.

சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திட லொருவன்
றன்னுநற் றவமெலாஞ் சுருங்கி
யாற்றிலே கரைத்த புளியெனப் போமென்
றறிஞர்க ளுரைத்திடல் சிறிதும்
போற்றிலே னுன்னைப் போற்றிலேன் சுவையிற்
பொருந்திய காரசா ரஞ்சேர்
சாற்றிலே கலந்த சோற்றிலே யாசை
தங்கினே னென்செய்வே னெந்தாய்.

பாலிலே கலந்த சோறெனில் விரைந்தே
பத்தியா லொருபெரு வயிற்றுச்
சாலிலே யடைக்கத் தடைபடேன் வாழை
தகுபலா மாமுதற் பழத்தின்
தோலிலே யெனினுங் கிள்ளியோர் சிறிதுஞ்
சூழ்ந்தவர்க் கீந்திடத் துணியேன்
வாலிலே னிருக்கில் வனத்திலே யிருக்க
வாய்ப்புளே னென்செய்வே னெந்தாய்.

வறுத்தலே பொடித்து மலர்த்தலே புரட்டி
வைத்தலே துவட்டலிற் சுவைக
ளுறுத்தலே முதலா வுற்றபல் லுணவை
யொருமல வயிற்றுப்பை யுளே

துறுத்தலேயெனக்குத்தொழிலெனத் துணிந்தேன்
துணிந்தரைக் கணத்தும்வன் பசியைப்
பொறுத்தலே யறியேன் மலப்புலைக் கூட்டைப்
பொறுத்தன னென்செய்வே னெந்தாய்.

கொட்டிலை யடையாப் பட்டிமா டனையேன்
கொட்டைகள் பரப்பிமேல் வனைந்த
கட்டிலை விரும்பி யடிக்கடி படுத்த
கடையனேன் கங்குலும் பகலும்
அட்டிலை யடுத்த பூனையே னுணவை
யறவுண்டு குப்பைமேற் போட்ட
கெட்டிலை யனையே னென்னினும் வேறு
நினைத்திடேல் காத்தரு ளெனையே.

துறவுக்கு வீண்வேஷங் காரணமன்றெனல்.

கைவல்ய நவநீதம்.

சிட்டர்புகழ் மகனேநீ சங்கித்த
சங்கைநன்று தெரியக்கேளாய்
கட்டழியுந் துறவுநால் வகையாகு
மவைகளுக்கங் காகும்பேர்கள்
பட்டதுயர் கெடுங்குடீ சகம்பகூ
தகமம்சம் பரமஹம்சம்
விட்டகலுந் துறவுக்கு விராகங்கா
ரணமன்றிவேட மன்றே.

ஒழிவிலொடுக்கம்.

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டுவது ஞானக் களவுகாண்—தேட்டமற்றோன்
பூரணன்காண் சிற்றறிவன் பொய்ப்பாச மென்றறிந்தார்க்
கோர்வடிவு வார்த்தையுமுண் டோ.

ஏட்டுப்படிப்பாலென்பயன் நாட்டம் படிக்கவேண்டுமெனல்.

சிவஞானப்பிரகாச வெண்பா.

பாடப் படிக்க வெழுதப் பயன்சொல்லக்
கோடாமல் வந்துங் குணமில்லை—சீடாகேள்
சித்திரதீ பம்போலே சிந்தை தனைநிறுத்தி
செத்தசவம் போலே திரி.

குருநாத சதகம்.

நாடானபா ருளநீளமு நரரண்டமே முதலாளினு [கை
மேடானவெண் கலைபாவைசித் தெல்லாமுவந் தெமதூதர்
ஆடானநல் லுயிர்விட்டுமே யாகநதளர்ந் திடுபோதிலே
கோடானுகோ டிகள்கற்றுமென் குருநாதனே குருநாதனே.

தவசி துறவி யோகி சிவபோகி இவரெனல்.

உபதேசமாலை.

சாந்த முடையோன் றவசி யவாவற்றோன்
வாய்ந்த துறவி மனமாண்டோ—னைந்துணர்ந்த

யோகிபரி பூரணத்தை யுற்றுணர்ந்தோ னல்லசிவ
போகியெனச் சொல்லும் பொது.

வாசாஞானம் பிரயோசனமின்றெனல்.

சிவபோகசாரம்.

ஆசையறுப் பாசம்விடா யானசிவ பூசைபண்ணுய்
நேசமுட னஞ்செழுத்தை நீநினையாய்—சீசீ
சினமே தவிராய் திருமுறைக ளோதாய்
மனமே யுனக்கென்ன வாய்.

சித்தர் கோர்வை.

மண்டலத்தில் குருக்களென்று பேரும் பெற்று
மகத்தான தூளிதமு மணிந்துக் கொண்டு
குண்டலங்கள் செவியிலிட்டுக் குல்லாய் சாற்றி
கோகரணங் கெசகரண மிரண்டுங் கற்றுத்
தெண்டிரையிற் பலவிதமாய்ப் பொய்கள் சொல்லி
சீடருக்கு வுபதேசம் தெளியச் சொல்வார்
ஒன்றுமில்லை யவர்கள்கையில் வித்தை யாச்சு
உள்ளவர்த்த மானமிதை யுரைசெய் தேனே.

பொருளைப் பொய்ஞ்ஞானி காட்டுவித்தல் பொய்யெனல்.

சிந்தனை வெண்பா.

பொன்னைப் பொருளைப் புகழைக் குறியாது
தன்னை யளித்தவனே சற்குருவா—மின்னமின்னம்
பொன்னீ பொருளீயென் றோது மவனெல்லா
மன்னியனே சற்குருவன் றாம்.

ஞான விளக்கம்.

அடிக்கரும்பு காட்டுகின்ற வாராத வின்பை
முடிக்கரும்பு காட்டுமோ மூட—மிடிக்கின்ற
மெய்ஞ்ஞானி காட்டுகின்ற மெய்ஞ்ஞானந் தன்னையொரு
பொய்ஞ்ஞானி காட்டுவித்தல் பொய்.

சந்தமற்ற யோகியைச் சந்தித்தோரும் வந்தித்தோரும் நரகம் புகுவரெனல்.

பதி பசு பாச விளக்கம்.

சிந்தையைப் புறத்தேவிட்டு தேகமே நாமென்றுன்னி
யந்தமில் போகம்வேண்டி யார்வமீ தூரநோற்குஞ்
சந்தமற் றுளிருமந்த யோகியைச் சந்தித்தோரும்
வந்தனை செய்துளோரும் பெறுவர்மா நிரையவைப்பே.

விருத்தி பேதமற்றவிடமே விஸ்ராந்தியெனல்.

வாசிட்டம்.

சிந்தனையாங் களங்கமறச் சுத்த னாகி
திரைக்கடலிற் செறிந்தொன்றுந் திவலை போல
வந்துறுவா தனைபோய்தற் பதத்தொன் றானான்
மாயாமோ கந்தீர்ந்து வருத்தந் தீர்ந்தான்
அந்தநெறி யுனக்குமா மறிவ தெல்லா
மறிந்தமனத் திற்குரிய வடைவே தென்னிற்
சந்ததமு மகிழ்ச்சிசெறி போக மெல்லாந்
தனதென்னுஞ் சுதந்தரத்தை தவிர்ந்து நிற்றல்.

தேவிகாலோத்தரம்.

மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற் சரித்துத்
திரியுமச் சித்தந் தன்னைத் தீர்த்து சூனியத்தே நின்றால்
மருவினோர் பிறித லின்றி வானவ ரறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்த சுத்தப் பொருளினை யடைவ ரன்றே.

ஓம் சிவம் சாந்தம் சம்பூர்ணம்.

சமாதி நட்சத்திரக்குறிப்பு.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உத்தமவாண் டென்னமறை யுணர்ந்தோர் தாமாய்ந்
தோதுபிர பவங்கன்னி மதியிற் செவ்வா
யெத்தியபிற் பக்கமுதற் பிரத மைக்க
ணியலுமொரு வசுவனிநட் சத்திரத்தில்
நித்தமுறு மார்க்கண்டு வர்க்கம் பூத்து
நிலவு*சிவா னந்தப்பேர் விமலன் றானுஞ்
சுத்தசிதா காசமய சொச்சொ ரூப
சுகக்கடலிற் றோய்ந்தபெருந் திருநா ளாமே.

வாழி விருத்தம்.

கார்பெறு கண்டத் தெம்மான் கவுரிநல் லுமையாள் வாழி
ஓர்பெரு மருப்பன் வள்ளிக் குகந்தவென் னப்பன் வாழி
ஏர்பெறு மடியார் மற்றை யியற்றவந் தானம் வாழி
சீர்பெற வள்ளூர் வாழி சிவானந்தா சிர்மம் வாழி.

---

* சுவாமிகள் தந்தையுங் குருவும் உமாப்ரசாதானுபூதி நூலாசிரியரும், மார்க்கண்டேயவர்க்கம் சிவபரங்கிரி சுவாமிகள் மாணவருமாகிய சிந்தாதிரிப்பேட்டை டேக்கு சந்துலால் என்னும் காமாக்ஷி சுந்தர சுவாமிகள் சமாதி பூவிருந்தவல்லி மாங்காடென வழங்கும் சூதாரண்யத்தில் என்பது உணர்தற்பாலதாம்.

ஓம் சாந்தி.

உ

ஓம் தத் சத்.

சமரச நிலைய சன்மார்க்க

வாக்கியோபதேசம்.

[உயிர் வருக்கம்.]

அறிவோ டிரு
ஆறுத லடைந்திரு
இன்பதுன்ப மற்றிரு
ஈடணையை விட்டிரு
உன்னை யுணர்ந்திரு
ஊண்சுவைப் பாராதிரு
எனதுன தெணாதிரு
ஏசினும் பேசாதிரு
ஐயாசை யகன்றிரு
ஒன்றிரண் டற்றிரு
ஓங்காரத் துள்ளிரு
ஔவியஞ் சொலாதிரு.

திருச்சிற்றம்பலம்.